Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 27    (12 - 08 - 1991)    திங்கட்கிழமை    ஓசை: 175

## வெளிவாரி பட்டப்படிப்பு யாழ். பல்கலை. ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக் கழகம் வெளிவாரிப்பட்டப் படிப்பு கற்கைநெறிகளை அண்மையில் ஆரம்பிக்கவுள்ளது இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மான்யக் குழு வழங்கியுள்ளது. வரும் 17 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகப் பேரவை கூடி இது தொடர்பான முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளது. முதலில் கலை முதல் தேர்வு (4ஆம் பக்கம் பார்க்க)

# கிளாஸ்ரோன் விவகாரம் சிறப்பான எடுத்துக்காட்டு; உள்விவகாரத்தில் வெளிச் சக்திகள் தலையீட்டை அனுமதிக்க முடியாது

## முஸ்லிம்களின் மாநாட்டில் பிரேமதாஸா

(கொழும்பு)

வெளிநாட்டுச் சக்திகள் எவையும் நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவது அனுமதிக்கப்படமாட்டாது இதற்கு பிரிட்டன் தூதுவர் கிளாஸ்ரோன் விவகாரம சிறந்ததொரு எடுத்துக்காட்டு என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பத்தாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

சுயமரியாதையை விரும்பும் மக்கள் என்ற வகையில் வெளிநாட்டுச்சக்திகள் எதுவும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது. இலங்கையில் பிரித்தானிய உயர் ஸ்தானிகராகப் பதவி வகித்தவர் திரும்பிச் செல்ல வேண்டியிருந்ததன் மூலம் இது நிருபணமாகிறது என்று அவர் கூறினார்.

மேலும் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா எடுத்த முயற்சிகளை நினைவுபடுத்திய பிரேமதாசா அவருடைய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### அன்ராஜ்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவில் இடம்பெற்ற போரில் 29-07-91 அன்று விழுப்புண்பட்டு சிகிச்சை பெற்று வந்த எம்மவரான அன்ராஜ் இராமச்சந்திரன்-சங்கர், வட்டக்கண்டல், மன்னார்) நேற்று வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஊரடங்கு தளர்வு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டம், கிளிநொச்சி மாவட்டத்தில் நகரிலிருந்து கரடிப்போக்குச் சந்திக்கு தென்புறமாகவும், யாழ்ப்பாண நகரம் மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிகளில் இதுவரை சிறிலங்கா அரசால் அமுல்படுத்தப்பட்டுவந்த ஊரடங்கு நேற்றுக்காலை ஆறு மணிமுதல் தளர்த்தப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும், கிளி (4 ஆம் பக்கம் பார்க்க)

# இரு நாள் மோதலில் 25 படை பலி; 21 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவின் தென்பகுதியில் கடந்த ஏழாம், எட்டாம் திகதிகளில் சிறிலங்க இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் 25 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபத்தியொரு புலிகள் வீரமரணமடைந்தனர்.

கடந்த ஏழாம் திகதி ஆனையிறவு முகாமின் தென்மேற்குப் பகுதியிலுள்ள தண்டுவின் கொட்டி, உல்லாசப்பயணிகள் விடுதி ஆகிய பகுதிகள் நோக்கி இராணுவம் முன்னேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் இராணுவம் மீது தாக்குதலை மேற்கொண்டனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர். புலிகள் தரப்பில் நால்வர் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்தவர்கள் விபரம் வருமாறு:

★ ஜொனி (நாகனாதி ஜெகதீஸ்வரன் மீசாலை வடக்கு)

★ திசா (சிவபாதலிங்கம் சிறீதரன் இரணை இலுப்பைக் குளம் வவுனியா)

(4ஆம் பக்கம் பார்க்க)

## நயினாதீவில் 'புலிகளின் குரல்' ஒலிபரப்புக் கேட்டவர்கள் வெளியேறத் தடை

(புங்குடுதீவு)

நயினாதீவில் ''புலிகளின் குரல்'' வானொலி ஒலிபரப்பைக் கேட்ட குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் எக்காரணம் கொண்டும் வெளியேறக் கூடாதென சிறிலங்கா கடற்படையினர் கடுமையான உத்தரவிட்டுள்ளனர். கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

வீட்டிற்குள் இருந்து மெல்லிய ஓசையில் புலிகளின் குரல் ஒலிபரப்பினை பிரஸ்தாப குடும்பத்தினர் கேட்டுக் கொண்டிருந்தவேளை அவ்வழியால் ரோந்து வந்த கடற்படையினர் அதனை ஒற்றுக் (4 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்புச் செலவு குறைந்தபின் தொழிலாளர் பிரச்சினைதீர்க்கப்படும்

- டி. பி விஜயதுங்கா

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புச் செலவீனம் குறைக்கப்பட்டாலே தொழிலாளர் பிரச்சினையில் கவனம் செலுத்த முடியும் என்று சிறிலங்காவின் பிரதம மந்திரியும், நிதிமந்திரியுமான டி. பி. விஜயதுங்கா தெரிவித்தார்.

அரசாங்க சேவைகள் தேசிய தொழிற் சங்க சம்மேளனத்தின் இரண்டாவது தேசிய மாநாடு நேற்றுக் காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையலுவலகமான சிறிகோத்தாவில் இடம் பெற்றபோது அதில்கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்காவின் பாதுகாப்புச் (4 ஆம் பக்கம் பார்க்க)

# எவ்-85 ரக யுத்தவிமானங்கள் சிறிலங்கா கொள்வனவு

சிறிலங்கா விமானப்படை சீனாவிடமிருந்து விமானங்களை வாங்கவுள்ளது. மூன்று எவ் - 85 ரக யுத்த விமானங்களை அடுத்த வாரமும், மேலும் மூன்று யுத்த விமானங்களை அடுத்த மாதமளவிலும் விமானப்படை கொள்வனவு செய்யும் எனப் பலாலியிலுள்ள சிறிலங்கா விமானப் படை சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெல்ஜியத்திலிருந்துதமிழீழ விடுதலைப் புலிகள் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளை கொள்வனவு செய்கிறார்கள் என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## தாயும் மகளும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்குள் புகுந்த ஒருவர் தாயும், மகளுமான இருவரை இரும்புக் கம்பியால் தாக்கி (4ஆம் பக்கம் பார்க்க)

# தீவிரவாதிகளை கட்டுப்படுத்த கடற்பரப்பில் ஹெலி ரோந்து

(சென்னை)

ராஜீவ் காந்தியின் கொலையோடு சம்பந்தப்பட்டவர்களாக தமிழக பொலிசாராலும், மத்திய புலனாய்வுப் பிரிவாலும் குற்றஞ்சாட்டப்பட்ட சிவராசன், சுபா ஆகிய இருவரும் இலங்கைக்கு தப்பிச் செல்ல முடியாமல் தமிழக கடற்கரைகளில் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தனுஷ்கோடிப் பகுதியில் சிவராசனும் சுபாவும் பதுங்கியிருக்கிறார்களா என்று வீடு வீடாக சோதனையிடப்படுவதாகவும், தமிழக கடற்கரையை ஹெலிகொப்டர் ஒன்று தாழப் பறந்து கண்காணித்து வருவதாகவும் தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

முன்னதாக கடந்த வெள்ளிக் கிழமை மூன்று படகு (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் தீவிரவாதிகள் நடவடிக்கையைத் தடுக்க விசேட அதிரடிப்படை

(சென்னை)

தமிழகத்தில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை முறியடிக்க விசேட அதிரடிப்படை ஒன்றினை தமிழக பொலிஸ் திணைக்களம் ஏற்படுத்த உள்ளது என்று தமிழக அரசு அறி (4ஆம் பக்கம் பார்க்க)

## மாலை ஆறு மணியின் பின் நயினாதீவில் நடமாடத்தடை

(புங்குடுதீவு)

நயினாதீவில் மாலை ஆறு மணியில் இருந்து காலை ஆறு மணிவரை வீடுகளை விட்டு பொதுமக்கள் எவரும்வெளியே வரக்கூடாதென அங்குள்ள சிறிலங்கா கடற்படையினர் உத்தரவிட்டுள்ளனர். இதனால் மாலை ஆறு மணிக்கு முன்பே நயினாதீவு வீதிகள் சனநடமாட்டம் எதுவுமின்றி வெறிச்சோடி விடுகின்றன. மக்கள் வீடுகளுக்குள் முடங்கி (4ஆம் பக்கம் பார்க்க)

## 6-ம் மாத நினைவு நாள்



### மேஜர் சூரி
(நடராசா நகுலேஸ்வரன்)
(வட்டக்கச்சி)

ஜனனம்; 24.01.1967 வீரமரணம்: 17.02.1991

மகனே நகுலேசா
என்றுமே சாகாப்
பெருவாழ்வு நீயடைந்தாய்
அன்னை விலங்கொடிக்கும்
அரிய திருப்பணியில்
உன்னையே ஈந்து
உயர்ந்துவிட்டாய் என்
மகனே
நாலாண்டுச் சேவையிலே

மேஜர் சூரியாகி விட்டாய்
நீ சென்ற பாதையிலே
உன் தோழரும் நாமும்
சென்றின்று வெற்றி
விளிம்புக்கு வந்துவிட்டோம்
நீ காணும் வெற்றியினை
நாம் கண்டு மகிழ்வதுண்மை
நீ வெற்றி கண்டதாய்
மகிழ்ந்திடுவாய் என்மகனே

இல: 35
கட்சன் வீதி,
வட்டக்கச்சி

பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்,
நண்பர்கள்.
(R/1627)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### லெப். கேணல் குட்டி
(இராசு செல்வேந்திரன்)



வீரஜனனம்: 28-05-1967 வீரமரணம்: 14-07-1991

நாளை **13-08-1991** செவ்வாய்க்கிழமை வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி கிரியையில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களும், நண்பர்களும் வேண்டப்படுகின்றனர்.

நன்றி

கெருடாவில்,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்
(B/ 2936)

### ஒன்றுகூடல்

வடமாகாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சாரணர்கள், திரி சாரணர்கள் அனைவரையும் இன்று (12-08-1991) மாலை 4-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் கூடுமாறு சாரணர் சேவை பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

### விசேட அபிஷேகம்

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமியம்பாள் திருக்கோவிலில் ஆடிப்பூரத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகமும், தொடர்ந்து ருதுசோபன வைபவமும் நடைபெறும்.

## அந்தியேட்டி அழைப்பு

**அன்புடையீர்!**

கடந்த 15-07-1991 இல் ஆனையிறவுப் போரில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை யூசி
(ஆறுமுகம்பிள்ளை ஸ்ரீ சுந்தரம்)

அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் என்பன **14 - 08 - 1991** புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். ஆகவே அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

A. G. A. லேன்,
நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(R-1624)

## இரண்டாவதாண்டு நினைவஞ்சலி

வீரமலர்வு
1964
--
09
--
10



வீரஉதிர்வு
1989
--
08
--
12

### கப்டன் தினேஷ்
(தமிழ்ச்செல்வன், உருத்திரபுரம்.)

*(1989-08-12 அன்று நெடுங்கேணி, பழம்பாசி என்னுமிடத்தில் இந்திய பரா இராணுவப்படையுடன் இடம்பெற்ற நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த முன்னை நாள் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர்.)*

**மறவர்படையில் இணைந்து**
**மானப்போர் தொடுத்து**
**வீரப்புலியாய் விரைந்துழைத்து**
**மண்டியிடா மண்ணிற்காய்**
**விண்ணுலகம் சென்றீர்.**
**உம் கனவை நனவாக்க**
**நாம் விரைந்து காவியம் சமைப்போம்.**

இன்றுவரை வல்லாதிக்க வெறி, இனவெறிப் படைகளுடன் நேரடி சமர் புரிந்து வீரமரணமடைந்த சகல மாவீரர்களையும் நினைவு கொள்கின்றோம்.

தகவல்:-
வட்ட அவை,
ஒட்டுசுட்டான்

முல்லை மக்கள்
(R-1628)

## TENDER FOR FURNITURE

**Sealed tenders are invited for the following:**

1. *Glass Fronted Almirah* - 12 *nos*
2. *Book Shelfs Steel* - *24 nos*
3. *Book Shelfs Timber* - *24 nos*
4. *Office Table* - *02 nos*
5. *Executive Cushioned Chairs* - *06 nos*
6. *Chair Steel Framed* - *12 nos*
7. *Executive Table* - *03 nos*
8. *Filling Cabinets* - 04 *nos*
9. *Steel Cuboard* - *02 nos*
10. *Lecture Hall Chairs* - 100 *nos*

*Drawings and relevant details except Item 8 & 9 be obtainea from the Bursar University of Jaffna on* **15 - 08 - 1991** *and* **16 - 08 - 1991** *during office hours on payment of Rs 200/-, as non - refundable tender deposit and refundable deposit of Rs. 5, 000/-*

*Sealed tenders should be forwarded to the Bursar, University of Jaffna on or before* **10 00** *A.M. on* **21-08-1991**, *indicating No. UJ/PO/T/41/91, on the left hand corner of the envelope. The tenders will be opened on the same day at 10-30 A. M.*

**Registrar**

*(B-2929)*

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 08 - 12

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் சிறிலங்காப் படையினரின் அட்டூழியங்களின் போது கொல்லப்பட்ட 6 தமிழர்கள்

1985 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
❋ ஈசி (பொன்னுத்துரை நவரட்ணராஜா - மேன்காமம்)

1986 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
❋ **நல்லையா இரட்ணசிங்கம்** (சூடைக்குடா)

1988 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
**ஜெகன்** (தர்மலிங்கம் ஜெகதாஸ் - அல்வாய் வடக்கு)

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு, பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர்
**கப்டன் தினேஷ்** (மரியஞானேந்திரன் தம்பிநாயகம் தமிழ்ச்செல்வன் - உருத்திரபுரம், கிளிநொச்சி)

இவருடன் வீரமரணமெய்திய
**கப்டன் தீப்** (வி. கேதீஸ்வரன் - திரியாய்)
**கீரன்** (வன்னியசிங்கம் உமாசங்கர் - குமுழமுனை)

சண்டிலிப்பாயில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மாகியப்பிட்டியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

விளானில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சங்கானை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

வல்வெட்டித்துறையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கொண்டல்கட்டையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்

1990 ஆம் ஆண்டு அம்பாறையில் ஜிகாத் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய
**பிலிப்** (பொத்துவில்)
**சந்துரு** (நிந்தவூர்)

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
**சேவியர்** (யூலியஸ் யோகரத்தினம் - பனங்கட்டிக் கொட்டு, மன்னார்)

ஏறாவூர் மருத்துவமனையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்

மட்டக்களப்பு, துறைநீலாவணைப் பகுதியில் ஜிகாத் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டு ரயர் போட்டு எரிக்கப்பட்ட ஐந்து இளைஞர்கள் உட்பட 60 தமிழர்கள்

இதே தினத்திலிருந்து இரண்டு நாட்களாக ஏறாவூர், சம்மாந்துறை, காத்தான்குடி பகுதிகளில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 82 தமிழர்கள்

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

❋ **மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2935)

## சிந்தனைக்கு

மனித இனத்திற்குச் செய்யும் சேவையே,
இன்னும் சொல்லப் போனால்,
உயிர்ராசி அனைத்துக்கும் செய்யும் சேவையே
மேலானது.

— மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 12-08-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 5208
த. பெ. எண் 05

# தமிழீழ மக்களின் பாராட்டிற்குரிய சேவை

ஆனையிறவில் ஒரு மாதத்திற்கும் மேலாகப் பெரும் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது இப்போருக்கு மக்கள் பல வழிகளிலும் விடுதலைப் புலிகளுக்குப் பேராதரவு வழங்கி வருகின்றார்கள். பொருள் ரீதியாகவும், சரீர ரீதியாகவும் இவ் உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மக்களுக்குப் போராட்டத்தின் மீதிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும், அவர்களின் எழுச்சியும் இம்மோதலின் போது வெளிப்பட்டுள்ளன.

ஆண், பெண் வேறுபாடு இன்றி, சிறியவர், முதியவர் பாகுபாடு இன்றி போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்ய மக்கள் முன்வந்தார்கள். போர்க்களத் தேவைகளுக்கும், ஏனைய தேவைகளுக்கும் என புலிகள் விடுத்த கோரிக்கைகளுக்கும் மக்கள் மனமுவந்து உதவி செய்தார்கள்.

இந்த உதவிகள் தனிப்பட்ட ரீதியிலும் நிறுவன ரீதியிலும் வழங்கப்பட்டன. மாணவர், மாணவிகள், தொழிலாளர், முதலாளி, அரச ஊழியர், கூலித்தொழிலாளி என்ற பாகுபாடு இன்றி போராட்டத்திற்குள் ஈர்க்கப் பட்டார்கள்; உதவினார்கள்.

இரத்ததானம் செய்யுமாறு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மக்கள் வழங்க முன்வந்த இரத்தத்தைச் சேமிக்க வசதி இல்லாது மீண்டும் அழைக்கின்றோம் எனத் திருப்பி அனுப்பவேண்டியநிலை உருவாகியது சிற்றுண்டிகளுக்கு விடுக்கப்பட்ட அழைப்புகளுக்குப் போதும், போதும் மீண்டும் தேவையானபோது கோருகின்றோம். தற்பொழுது கொடுத்தது போதும் என அறிக்கைகள் விடவேண்டிய நிர்ப்பந்தங்கள் உருவாகின. அதேவேளை மேலும் பலர் களம் சென்றும் உதவினர். இவர்களின் உதவி போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதாகவும் இருந்தது.

இதேபோன்று காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கவும், உதவவும், ஆயிரக்கணக்கான மக்கள் முன் வந்தார்கள்; ஒத்துழைப்பு வழங்கினார்கள். வைத்திய சாலையில் சிரமதானப் பணியிலும் ஈடுபட்டார்கள்.

மக்களின் எழுச்சிக்கும், உதவிக்கும் சிகரம் வைத்தாற் போல் அமைந்தது யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்தவர்களின் உணர்ச்சிபூர்வமான பங்களிப்பாகும். யாழ் போதனா வைத்தியசாலையில் சேவையாற்றிய வைத்திய நிபுணர்கள், தாதிகள், ஏனைய ஊழியர்களின் சேவை மிகவும பாராட்டப்பட வேண்டியதும் மதிப்பளிக்க வேண்டியதும் ஆகும்.

யாழ்: அரசினர் வைத்தியசாலை ஒரு போதனா வைத்தியசாலையாக இருப்பினும் அது எதிர்நோக்கும் நெருக்கடிகள் அளப்பரியனவாகும். போதிய கருவிகள் இல்லை. போதிய வசதிகள் இல்லை. எடுத்துக்காட்டாக எக்ஸ்ரே கருவிகள் தொழிற்படுவதில்லை. இரத்தத்தைச் சேமித்துவைக்க வசதிகள் - இவற்றிற்கும் மேலாக மின்சார வசதி இல்லை. ஊழியர் சென்று வர போக்குவரத்து வசதி இல்லை. அத்தோடு நோயாளருக்குத் தேவையான போதிய மருந்தில்லை. நோயாளர்கள் படுப்பதற்குக் கட்டில்கள் இல்லை.

இதற்கும் மேலாக போதிய வைத்திய நிபுணர்கள் இல்லை. எமது மண் போதிய வைத்திய நிபுணர்களை உருவாக்கிய போதிலும், எமது மக்களுக்கு சேவை செய்ய அவர்கள் இங்கு இல்லை. இந்நிலையில் மிகக்குறைந்த எண்ணிக்கை கொண்ட வைத்திய நிபுணர்கள் இரவு பகல் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் காயமடைந்த போராளிகளைக் கண்காணித்தார்கள். தமது கடின உழைப்பால் பல உயிர்களைப் பாதுகாத்தார்கள் அவர்களுக்கு சளைக்காமல் ஏனைய ஊழியரும் உதவினர்.

கடமை நேரம், சேவை நேரம் என்ற பாகுபாடு இன்றியும் இரவு பகல் வேறுபாடு இன்றியும் தமது சேவையைச் செய்துள்ளார்கள். இவர்களின் சேவை மதிக்கத் தக்கது; கௌரவத்திற்குரியது.

இவ்வாறு சகலதரப்பு தமிழ் மக்களும் ஆனையிறவுப் போரின்போது காட்டிய, காட்டும் எழுச்சியும் பங்களிப்பும் தமிழீழப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு இன்னும் வெகுதூரம் இல்லை என்பதைக் காட்டும் அறிவிப்புகள் ஆகும்.

# கச்சதீவு கடற் பகுதியில் மீன்பிடிக்க உரிமை வேண்டும்

-- ஜெயலலிதா

(சென்னை)

1974ஆம் ஆண்டு இந்திய-இலங்கை கச்சதீவு ஒப்பந்தத்திற்கு முன்பு இருந்த நிலையில் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்க இருந்த உரிமையினை தமிழக மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என மத்திய அரசை கோரப் போவதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முதலமைச்சர் தலைமைச் செயலாளர் ரி.வி.வெங்கட்ராமன், உள்துறை செயலாளர் மலைச்சாமி, சட்ட ஒழுங்கு இன்ஸ்பெக்டர் தேவாரம் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்களின் போது இந்த முடிவு எடுக்கப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

1974 ஆம் ஆண்டு கையெழுத்தாகிய இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு முன்பு இருந்த நிலையில் கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்க என்னென்ன உரிமை இருந்ததோ, அத்தனை உரிமைகளையும் தமிழக மீனவர்களுக்குவழங்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் கோருவதென்றும், அது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதே நேரம் மீன் பிடிப்பதற்கு தமிழக அரசு விதித்த சில கட்டுப்பாடுகளை மீறியதற்காக மீனவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறுவது என்றும்,

இனிமேலும் இந்த கட்டுப்பாடுகளை மீறும் மீனவர்கள் மீது மீன் வளத்துறை முதல் இருமுறை நடவடிக்கை எடுப்பதென்றும், மூன்றாவது முறையாக கட்டுப்பாடுகளை மீறும் மீனவர்கள் மீது காவல் துறை கடுமையான நடவடிக்கை எடுப்பது என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சிறிலங்கா கடற்படையால் கைப்பற்றப்பட்ட படகுகளை திரும்ப எடுக்க தமிழக அரசு மத்திய அரசு மூலம் நடவடிக்கை எடுக்கும் என்றும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப் பட்டது.

# பி. ஜே. பி. ஆதரவென்றால் பாரதீய ஜனதா...

(மதுரை)

சத்யமங்கலம் தொகுதியில் அ. இ அ. திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக ஏ. டி. சரஸ்வதி போட்டியிட்டார். தமிழ் நாட்டில் வாக்குச் சீட்டுக்கள் எண்ணிக்கை நடந்து கொண்டிருந்த நாள். அன்றைய தினம் பத்திரிகையாளர் சரஸ்வதியைச் சந்தித்துக் 'குசலம்' விசாரிக்க, அவர் சந்தோஷமாகத் தனது வெற்றியையும், கட்சியின் வெற்றியையும் குறித்துப் பேசினார். சரஸ்வதியுடன் இருந்த அவரது உதவியாளர் ''தமிழ் நாட்டில் பிரச்சினை ஒன்றும் இருக்காது. டெல்லியில் தான் பிரச்சினை காங்கிரசுக்கும் பெரும்பான்மை கிடைக்காது போலிருக்கு அது கூடப் பிரச்சனை வராது என்று நினைக்கின்றேன். பி. ஜே. பி. கூடக் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு தரும் நிலை உண்டாகும்'' என்ற போது, இடைமறித்த ஏ. டி. சரஸ்வதி மிகவும் அக்கறையுடன் ''அப்ப பாரதீய ஜனதாக் கட்சி என்ன பண்ணும்?'' என்றார். பி. ஜே. பியும் ஜனதாக் கட்சியும் ஒன்றுதான் என்று கூடத் தெரியாத நிலை இந்த எம். எல். ஏக்கு. இது செல்வி ஜெயலலிதா அரசியல்

# மருந்து வகைகளுக்கும் மதுசாரத்திற்கும் தடை

(கொழும்பு)

வடக்கிற்கு கொண்டு செல்ல கட்டுப்படுத்தப்பட்ட 48 வகையான பொருள்களும் எவையென வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வர்த்தமானியில் இடம் பெற்றுள்ள கட்டுப்படுத்தப் பட்ட சில பொருள்களின் விபரம் வருமாறு:

மருந்துவகைகள், மதுசாரம், தங்கம், சீமெந்து, வெற்றுச் சாக்குகள். மோட்டார் சைக்கிள்கள், கற்பூரம், சவர்க்காரம் ஆகியவையும் இவற்றுள் அடங்கும்.

அனுமதிக்கப்பட்ட பொருள்களை விட இப்பொருள்களை யாராவது எடுத்துச் செல்ல வேண்டுமானால், புனர்வாழ்வு அமைச்சிடம் இருந்து அனுமதி பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர்களை திரட்ட பிணை கட்டப் பணிப்பு

(கொழும்பு)

தொழிலாளர்களை திரட்ட இலங்கைக்கு வரும் முன்பு, மத்திய கிழக்கு அரேபியர்கள் பிணை கட்ட வேண்டும் என தொழில்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர்களை திரட்ட மத்திய கிழக்கிலிருந்து இங்குவரும் அரேபியர்கள் தமதுநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் சுமார் 15 லட்சம் டொலரை பிணை வைக்க வேண்டும் எனவும் அதன் பின்னரே இங்கு வந்து தொழிலாளரைகூட்டிச்செல்ல அனுமதிக்கப்படுவர் எனவும் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

# சிங்கள வர்த்தகர்களின் உடைமைகள் பறிமுதல்

(வவுனியா)

இலஞ்சம் பெற்றுக் கொண்டு, சிறிலங்கா அரசாங்கத்தினால் தடைசெய்யப் பட்ட பொருள்களென கூறப்படும் பெற்றோலியப்பொருள்களை வடபகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு காரணமானவர்களென கருதப்பட்டு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள வர்த்தகர்களின் நிலை மோசமடைந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த எச். பீ. பியதிலக என்ற வர்த்தகர் பொலிஸாரினால் துன்புறுத்தலுக் குள்ளாகியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது பதின்மூன்று மினி பஸ்களும், நான்கு லொறிகளும், மேலும் பல வாகனங்களும் அனுராதபுரம் பொலிஸாரினால் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்றும் மேற் குறிப்பிடப்பட்ட மினி பஸ்கள் அனைத்தும் அனுராதபுரம் கொழும்பு பயணிகளுக்கான போக்கு வரத்து சேவையில் ஈடுபட்டு வந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா ஜெகன் அரிசி ஆலைலொறிச்சாரதிகட்டைக் காதர் என்பவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

இச்சம்பவம், சிங்களப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகிறது. (தி)

## கருத்தரங்குகள்

தமிழீழத்தில் தற்போது போர்க்கால கருத்தரங்குகள் பரவலாக நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளில் இன்று (12-08-1991) இரவு 8-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழீழ மக்களை போர்க்கால கருத்தரங்குகளில்இணையும்படி தமிழீழ மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவு தலைமைச் செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகால பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி ஆராய்வதற்காக யாழ்.மாவட்டத்தில் உள்ள சகலநலன்புரிக்கழக அவசர முதலுதவிப் பிரிவின் அங்கத்தவர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பதவி நிலை உத்தியோகத்தர் வேலை மதிப்பீடு

(நல்லூர்)

வட-கிழக்கு மாகாண சபைக் கல்வி அமைச்சு கல்வித் திணைக்களங்களின் கடமையாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்களின் வேலைகளை மதிப்பீடு செய்ய உள்ளது. பணி நிறைவேற்றும் அறிக்கைகளைக்கட்டாயமாக அனுப்பும்படி பணிப்புரைவழங்கியுள்ளது மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் தமது நிகழ்ச்சித் திட்ட முன்னறிக்கை, திருத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றை மாதாந்தம் அனுப்பிவைக்கும்படி கோரியுள்ளது.

மாணவர் அபிவிருத்தி. பாடசாலை ஆள் அணிகள் தேவையும் பயன்பாடும். ஆசிரியர் அபிவிருத்தி, பாடத்திட்ட அமுலாக்கல், பாடவிதானம். மேற்பார்வையும், மதிப்பீடும், முகாமைத்துவஅபிவிருத்தி, காரியாலய அபிவிருத்தி மற்றும் பாடசாலையையும் சுற்றாடல் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதே மாதாந்த அறிக்கை கோரியதன் நோக்கம் என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

## படகில் திருட்டு

(புங்குடுதீவு)

நயினாதீவிற்கு எடுத்துச் செல்லப்படுவதற்காகக் குறிகாட்டுவான்துறையில் படகில் ஏற்றப்பட்டிருந்த பொருள்கள் சில களவாடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நயினாதீவுக்குக்கொண்டு செல்லப்படுவதற்காக சங்கப் படகான 'செந்தாரகை' யில் ஏற்றப்பட்ட பொருள்கள் நயினாதீவு சிறிலங்கா கடற்படையினரின் அனுமதி கிடைக்காமையினால் கொண்டு செல்லப்படாது படகிலிருந்தபோதே பால் மாப் பைக்கற்றுக்கள், பேனாக்கள் உட்பட பல பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. (22)

### மக்கள் மத்தியிலுள்ள சுதந்திர உணர்வே

# எதிரிகள் முன் நாங்கள் தலை நிமிர்ந்து நிற்கிறோம்

### -- மக்கள் முன்னணி பிரமுகர் தினேஷ்

(யாழ்ப்பாணம்)

'இத்தேசம் விடுதலையடைய வேண்டும் என்ற உணர்வு மக்கள் மத்தியில் இருப்பதால் தான் நாங்கள் எதிரிக்கு முன்னால் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். இந்த தேசம் விடிவுபெற வேண்டும் என்ற நம்பிக்கை உங்கள் மனதில் இருப்பதை நான் காண்கிறேன். நாம் சுதந்திரமாக வாழ வேண்டுமென்றால் எமக்கென்று ஒருநாடு வேண்டும் அதற்காக நாம் எல்லோரும் எந்தவித வேறுபாடுகளும் இன்றி ஆயுதமேந்துவோம்'' என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியை'ச் சேர்ந்த தினேஷ் நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் அளவெட்டி அம்மன் கோயிலடியில் நடந்த போர்க்கால கருத்தரங்கில் மக்கள் முன்னிலையில் அறைகூவல் விடுத்தார்.

மேலும் அவர் உரையாற்றும்போது கூறியதாவது இராணுவத்தினர் தமக்கு இடம் தெரியாத இடங்களில் நின்று போராடுகின்றனர் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தார் இதிலிருந்து இந்தநாடு அவருக்கு ஒரு அன்னிய நாடு என்பதை உணரக்கூடியதாக உள்ளது என்றார்.

எமது மக்களுக்காக எதையும் செய்யத் துணியும் விடுதலைப் புலிகளின் பலத்தை அனைத்துப் பொதுமக்களும் வலுப்படுத்தினால் விடிவு வெகு தூரமில்லை என்றும் அவர் கூறினார்.

## தபால்களை இன்று சேர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

நாளை பருத்தித்துறையில் தங்கி நிற்கும் கப்பல் புறப்பட இருப்பதால் இன்று மாலைக்கிடையில் அனைத்துக் கடிதங்களும் யாழ். பெரிய தபாலகத்திற்கு கிடைக்க கூடிய வகையில் சேர்ப்பிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை காலை அனைத்துக் கடிதங்களும் பருத்தித்துறை இறங்குதுறைக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது (லோ)

## வாழப்பாடி ராமமூர்த்திக்கு அ. இ. அ. தி. மு.க. பாராட்டு

(சென்னை)

காவிரி நீர் பிரச்சினை தொடர்பாக இந்திரா காங்கிரஸ் தமிழக தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மேற் கொண்ட நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்விழாவொன்றினை நடத்தியது.

நேற்று முன்தினம் சென்னையில் இடம் பெற்ற இவ் விழாவில் மாநில அமைச்சர்களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க ராமமூர்த்தி மேற் கொண்ட நிலையையும், செயற்பட்ட விதத்தையும் பெரிதும் பாராட்டி இந்த விழா நடைபெற்றது.

மாநில நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் ராமமூர்த்திக்கு பொன்னாடை அணிவித்து கேடயம் வழங்கினார்.

## உத்தரப் பிரதேசத்தில் 6 தாழ்த்தப்பட்டோர்கொலை

(டில்லி)

உத்தரப்பிரதேசத்தில் கருக்கா பாத் மாவட்டத்தில் உள்ள லக்கன்பூர் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் 6 பேரை இனந்தெரியாதவர்கள்சிலர்கொலை செய்து விட்டனர்.

இந்தக் கொலை பற்றி பாராளுமன்ற விசாரணை தேவை என்று சமாசவாதி ஜனதாக் கட்சி கோரியிருக்கிறது. எளிய பிரிவினரைக் காப்பாற்றுவதற்கு மாநில அரசு தவறிவிட்டது என்பதனையே இக் கொலைச் சம்பவம் காட்டுகிறது என்று சமாசவாதி ஜனதா தள் பொதுச் செயலர் சந்தியம் பிரகாஸ் மாளவியா கூறினார்.

## ஜ. தளம் உயிர் பிழைக்க கூட்டுத்தலைமை வேண்டும்

(டில்லி)

ஜனதா தள் உயிர் பிழைத்திருக்க வேண்டுமானால் கூட்டுத் தலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று அநீக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவரான அஜித் சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜெய்ப்பூரில் செய்தியாளரிடம் பேசிய அவர் இன ஒதுக்கீடு, சமூக நீதி, விவசாயிகள் தொடர்பான கட்சியின் கொள்கைகளில்உள்ள குறைகளைக் கண்டறிந்து அவற்றை களைய வேண்டுமெனக் கூறினார்.

வி. பி. சிங்குடன் தான் கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு பற்றிக் கூறிய அவர் அதை இனித்தான் தீர்க்க வேண்டும் என்றார். இந்திரா காங்கிரஸுடன் சேரும் எண்ணம் தனக்குக் கிடையாது என்றும் உறுதிப்படுத்தினார்.

## பாரதீய ஜனதா குறித்து நான் பேசவில்லை

### -மாதவராவ் சிந்தியா

(திருவனந்தபுரம்)

அண்மையில் தான் குறிப்பாகப் பேசியது எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் எதிரானது அல்ல என்று மத்திய சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியா கூறியிருக்கிறார்

அரசியல் ஆதாயத்துக்காக மதத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக மட்டுமே தான் அப்படிச் சொன்னதாக அவர் கூறினார்.

நேற்றுத் திருவானந்தபுரத்தில் செய்தியாளர் மத்தியில் பேசிய மாதவராவ் சிந்தியா நாட்டு நலன்களுக்கு எதிரானவர்கள் தான் மதத்தைக் குறுகிய அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றனர். எனவே அவர்களைத் தேசத்துரோகிகள் என்றுதான் அழைக்க வேண்டும் என்றார்.

தான் இப்படிப்பேசியபோது எந்த ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியையும் மனதில் வைத்துப் பேசவில்லை என்றும் அவர் தெளிவு படுத்தினார்.

மாதவராவ் சிந்தியாவின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து லோக் சபாவைப் புறக்கணித்து வரும் பாரதீய ஜனதாக் கட்சி நாட்டில் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஆபத்து ஏற்படுத்தும் வகையில் உணர்ச்சிபூர்வமாகப் பிளவுபடுத்தும் ஒரு கொள்கையை அக் கட்சி பின்பற்றி வருவதாக வி. பி. சிங் குற்றம் சாட்டினார்.

## விடுதலை

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பணயம் வைக்கப்பட்டிருந்த அமெரிக்கரான எட்வேர்ட் கிரேசி நேற்று விடுதலை செய்யப்பட்டார். ஈரானிய சார்பு கடத்தல்காரர்களால் 1986 ஆம் ஆண்டில் கடத்தப்பட்ட இவருக்கு தற்போது வயது அறுபது ஆண்டுகளாகும். கடத்தல்காரர்களால் பிரிட்டிஷ்காரரானஜோன்மக்கார்தி சிலதினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டது தெரிந்ததே.

**உள்விவகாரத்தில்**

முயற்சிகள்காரணமாகஇந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்திய அமைதி காக்கும்படை இலங்கைக்கு வர அனுமதிக்கப்பட்டது. இவற்றின் விளைவாக மாகாணசபை முறை நடைமுறைக்கு வந்தது இந்தத் தீர்மானம் ஒருதலைப்பட்சமாக இருந்தமையால் ஜே வி பியும் ஏனைய அரசியல் கட்சிகளும் எதிராக இயங்கத் தொடங்கின அரசியற் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துவதன் மூலம் சர்வகட்சி மாநாட்டின் மூலமும் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பதை ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் பிரகடனம் செய்திருந்ததையும் சுட்டிக் காட்டினார்.

இந்நாட்டில் வாழும் எந்த ஒரு பிரிவினரும் அநீதியை எதிர்நோக்க வேண்டியிராது. சிங்களமும், தமிழும் அரசகரும மொழிகளாக ஆக்கப்பட்டிருப்பதனால் மொழிப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டுள்ளது இணைப்புமொழியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்த அம்மொழி போதிக்கப்படுகிறது என்று தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, பல மக்கள் இடையே நிலவிவந்த சந்தேகம் நீக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

சமய, இன வேறுபாடுகள் இருப்பினும், அரசு இனவிகிதாசாரரீதியாக வேலை வாய்ப்பு வழங்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

## அல்பேனிய அகதிகளை திருப்பி அனுப்ப ஏற்பாடு

இத்தாலியில் பெருந்தொகையான அல்பேனியர்கள் புகலிடம் கோரிச் செல்வதைத் தடுப்பதற்காக ஐரோப்பிய நாடுகளின் அவசர மாநாடு ஒன்றிற்கு இத்தாலி அழைப்பு விடுத்துள்ளது.

இத்தாலி நகரின் தென்பகுதியிலுள்ள பாரே நகருக்கு கடந்த வியாழன் மட்டும் சுமார் 10,000 அல்பேனியர்கள் வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கப்பல் மார்க்கமாக அல்லது விமான மார்க்கமாக அல்பேனியாவுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் இவர்கள் அரசியல் அகதிகள் அல்லவென்றும், சட்ட விரோதமாக குடியேற முயன்றவர்கள் என்றும் இத்தாலிய அரசு அறிவித்துள்ளது

**நடவடிக்கையைத்**

வித்துள்ளது.

புதுடில்லி தேசிய பாதுகாப்புக் கழகம் அதிரடிப்படையினை தோற்றுவிப்பதற்கு உதவி செய்யும் எனவும், ஹரியானாவில் அமைந்துள்ள மேற்படி கழகத்தில் தமிழகத்தில் சப் இன்ஸ்பெக்டர், றிசேவ் இன்ஸ்பெக்டர் தரத்திலிருக்கும் 40 பேருக்கு ஆரம்பத்தில் பயிற்சி அளிக்கப்படும் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

**தீவிரவாதிகளை**

கள் இராமேஸ்வரத்தை நோக்கி வேகமாக சென்றதாகவும், இந்திய கடற்படை ஹெலிகொப்டர் ஒன்று அதனைத் துரத்தியதாகவும் ஆனால் அந்தப் படகில் வந்தவர்கள்படகைகரையோரகாட்டுப்பகுதிக்குள் நிறுத்திவிட்டு ஊருக்குள் நுழைந்து விட்டதாகவும் அந்தப் படகில் சிவராசன், மகேந்திரன் என்ற இரு விடுதலைப்புலிகளின் படம் இருந்தது என்றும், சிவராசனை மீட்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல இந்தப்படகு வந்திருக்கலாம் என்றும் தமிழககாவல் துறை தெரிவித்தது.

**மாலை**

விடுகின்றனர். ஆறு மணிக்குப் பின்னர் கடற்படையினரே வீதிகளில் ரோந்து திரிகின்றனர். அவ்வேளை கண்ணில் படும் பொது மக்களை அவர்கள் அடித்துத் துன்புறுத்துவதோடு முகாமிற்குக் கொண்டு சென்று விடுகின்றனர். நோயாளர்களை எடுத்துச் செல்வதற்குக்கூட படையினர் இரவில் அனுமதி அளிப்பதில்லை (22

**வெளிவாரி**

மற்றும் வர்த்தக முதல் தேர்வு நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பல்கலைக்கழக அனுமதி கிடையாதவர்களும், தொழில் துறை சார்ந்தவர்களும் தமது உயர் படிப்பைத் தடங்கலின்றித் தொடர முடியும்.

**பாதுகாப்பு**

செலவீனம் ரூபா 25,000 மில்லியனை எட்டிவிட்டது. வடக்கு-கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் பாதுகாப்புச் செலவீனம் குறைவடையும் எனவும் தெரிவித்த டி. பி. விஜயதுங்கா இந்த யுத்தத்தில் சிறிலங்கா வெற்றி பெறும் எனவும் தெரிவித்தார்.

**இரு நாள்**

★ குணேஸ் (கறுப்பையா திவாகரன் தலைமன்னார் பியர்)

★ திருணா (கு. மூர்த்தி 3-ம் வாய்க்கால் பரந்தன்)

இம் மோதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 29 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

அடுத்த நாள் வியாழக்கிழமை காலை தொடர்ந்து மாலைவரை ஆனையிறவு உப்பள உல்லாச விடுதிப்பகுதியில் மோதல் இடம் பெற்றது. இம்மோதலைத் தொடர்ந்து உப்பள உல்லாச விடுதியில் இருந்து புலிகள் வெளியேறினர். இம் மோதலில் இருபதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 50க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பதினேழு புலிகள் வீரமரணமடைந்தனர்.

இம் மோதலில் வீரமரணமடைந்த புலிகளின் விபரம் வருமாறு

★ விக்டர் (இராசரட்ணம் சத்தியபாலன் புல்மோட்டை)

★ விசா (பி. ராஜன், 6 ஆம் கட்டைபாலையூற்று திருக்கோணமலை)

★ விஜி (பா. இலங்கேஸ்வரன் புதுக்குடியிருப்பு திருக்கோணமலை)

★ கவி (யோகராசா சிவபாலன், 4 ஆம் கட்டை புல்மோட்டை)

★ இளங்கதிர் ஆறுமுகம் ரகுகுமார் பாலையூற்று)

★ தியாகராஜன்(முநகையா-ராஜ் பாலையூற்று)

★ சிவபாலன்(மருதப்பிள்ளை சத்தியநாதன், சிவலிங்கம் கடை பூந்தோட்டம் வவுனியா)

★ ஜீவராசா சின்னையா நாதன், தண்ணீரூற்று)

★ ஜோதி (பாலசிங்கம் றூபராசா சிவன்கோயில் வீதி உருத்திரபுரம்)

★ மாக்ஸ் (பத்மநாதன் ராஜ்குமார்புளியம்பொக்கணை கண்டாவளை

★ அமலதாஸ் (நடராசா சிறிஸ்கரன் அன்புவழிபுரம் திருக்கோணமலை)

★ வரன் (கந்தர் தர்மகுலசிங்கம் சிவன்கோயிலடிவீதி உருத்திரபுரம்)

★ பில்லா (வேலாயுதம் பிள்ளை கருணன் அம்பலவன்பொக்கணை முல்லைத்தீவு)

★ பதுமநிதி (சுயாஜினி சிறிதரன் உரும்பராய் கிழக்கு உரும்பராய்)

★ கில்பேட்(மணியம்மோகன் ரஞ்சன் குமுழமுனை)

★ வாசு (கறுப்பையா மாணிக்கம் பூந்தோட்டம் வவுனியா)

★ செல்விற் (வேலாயுதம், நாகேஸ்வரன் தண்டுவான் நெடுங்கேணி,

இந்த இருநாட்கள் மோதலிலும் வீரமரணமடைந்தோருக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

**தாயும் மகளும்**

னார். நேற்று முற்பகல் ஒன்பது மணியளவில் நவாலி சொக்கலிங்கம் வீதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் திருமதி கமலாம்பாள் நடராசா (45 வயது), செல்வி நளினி (19 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (54)

**ஊரடங்கு**

நொச்சி மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

**ஒலிபரப்பு**

கேட்டனர். இதனைத் தொடர்ந்து அக்குடும்ப உறுப்பினரான இளைஞர் ஒருவரை முகாமிற்கு அழைப்பித்து பலமாகத் தாக்கியதோடு எக்காரணம் கொண்டும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நயினாதீவை விட்டு வெளியேறக் கூடாது என கண்டிப்பான உத்தரவிட்டுள்ளனர். (22)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ஆம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.